(குறுக்கீடு) அவர் அளித்த தன்னிலை விளக்கத்தில் 'டிபேட்' தேவையில்லை. அதாவது நேற்று இப்படிச் சொன்னதை இப்போது வஞ்சப் புகழ்ச்சியாகத்தான் சொன்னேன் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இதிலே விவாதம் வேண்டாம். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: அப்படி அந்த அறிக்கை விட வேண்டிய நெருக்கடி என்ன? (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிக்கையில் பாராட்டியதாக வந்திருக்கிறது. நான் வஞ்சப் புகழ்ச்சி யாகச் சொன்னேன் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதற்கு எந்த விதமான நெருக்கடியும் வரவில்லை, நாட்டிலுள்ள பொது மக்களுக்கு நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேற்கொண்டு விவாதம் வேண்டாம், குறுக்கீடு தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விளக்கம் வேண்டாம்.

3. கவன ஈர்ப்பு.

(அ) வால்பாறை மலைப் பகுதியில் சிறுத்தைப் புலியின் தாக்குதலால் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் அ, ஸ்ரீதரன்,

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப்பகுதியில் புலிகளின் அட்டகாசத்தால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டு, முந்தாநாள் ஒரு பள்ளி மாணவன் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே இருப்பதை அப்படியே படிக்க வேண்டும்,

1992 மார்ச் 19]

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியில் புலிகளின் அட்டகாசத்தால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டது. முந்தாநாள் ஒரு மாணவன் இறந்தது குறித்து பொது மக்கள் மத்தியிலும். தொழிலாளர்கள் மத்தியிலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து குறிப்பிலே என்ன கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதையே நீங்கள் படிக்க வேண்டும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை மலைப் பகுதியில் சிறுத்தைப புலியின் தாக்குதலால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து" மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது குறித்து விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது,

அறிக்கை.

வால்பாறை மலைப் பகுதியில் 25—2—1992 அன்று சிறுத்தைப் புலி ஒன்று ஒரு சிறுவனைத் தாக்க முயற்சி செய்தது, ஆனால் சுற்றியிருந்த மக்கள் கூச்சல் எழுப்பவே, அந்த சிறுத்தைப் புலி சிறுவனைத் தாக்காமல் ஓடிவிட்டது. சிறுவனுக்கு எந்தவித காயமும் இல்லை, 27—2—1992 அன்று பிற்பகல் 6-20 மணியளவில் வாட்டர்பால்ஸ் (மேற்கு) தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் திரு. தங்கராஜ் என்பவரின் மகனான அரிகிருஷ்ணன் என்ற ஏழு வயதுள்ள சிறுவனை சிறுத்தைப்புலி தாக்கி கொன்று விட்டது, இச்சிறுவன் தேயிலைத் தோட்ட புதருக்குள் மலம் கழிக்க அமர்ந்திருந்தபோது சிறுத்தைப்புலி இழுத்துச் சென்று கொன்றதாகத் தெரிகிறது, அதே நாளில், அதாவது 27—2—1992 அன்று இரவு 8.20 மணிக்கு ஒரு சிறுத்தைப் புலி ஒன்பது வயதுள்ள சிறுவனை தாக்கியது, இந்த இடம் வனச்சரகம் அலுவலகம் உள்ள வாட்டர்பால்ஸ் பகுதியிலிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளது. சிறுவன் வயிற்றிலும் மார்பிலும் புலியால் கீரப்பட்ட காயங்களுடன் உயிர் தப்பினான்,

27—2—1992 அன்று அரிகிருஷ்ணன் என்ற சிறுவன் தாக்கப்பட்டு இறந்த செய்தி கிடைக்கப் பெற்றவுடன், வால்பாறை வனச்சரகர் தலத்திற்கு விரைந்து சென்று புலியின் கால் பதிவுகளை பதிவு செய்துள்ளார். சிறுத்தைப் புலியை கூண்டில் வைத்து பிடிக்க முதுமலையிலிருந்து கூண்டு ஒன்று கொண்டு

வரப்பட்டு அதில் சிறுத்தைப் புலிக்கு இரையாக ஆடு ஒன்றும் வைக்கப்பட்டது, இதேபோல் இன்னொரு இடத்திலும் ஒரு கூண்டு வைக்கப்பட்டுள்ளது, ஆனாலும் சிறுத்தைப் புலி இதுவரை சிக்கவில்லை, அதனைப் பிடிக்க வனத்துறை அதிகாரிகள் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர், எப்படியும் பிடித்துவிடலாம் என நம்பிக்கை உள்ளது. வனத்துறை அலுவலர்களின் நடவடிக்கையினால் மக்களிடையே பயம் நீங்கி நம்பிக்கை வளர்ந்துள்ளது,

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவம் நடந்த இடம் வால்பாறை வாட்டர் ஃபால்ஸ் எஸ்டேட்டினுடைய வெஸ்டிலிருந்து ஈஸ்ட் வரை பெல்ட்டாக அமைந்துள்ள சோலையிலே 27—2—1992 அன்று மாலை 6.20 மணிக்கு புலியால் தாக்கப்பட்டு ஒரு பள்ளி மாணவன் இறந்திருக்கிறான். அன்றைய தினமே அந்தப் புலி கீழே இறங்கி வந்து வாட்டர் ஃபால்ஸ் எஸ்டேட்டினுடைய ஈஸ்ட் என்றஇடத்திலே இரவு 8 மணிக்கு வேறு ஒரு பள்ளி மாணவனைத் தாக்கியிருக்கிறது. அடுத்தபடியாக இரண்டு நாட்கள் கழித்து ஐயர்பாடி எஸ்டேட்டில் அதே புலி ஒரு பள்ளி மாணவனைத் தாக்கியிருக்கிறது. இதனால் அங்கேயுள்ள பள்ளிகளுக்குச் செல்லும் பச்சிளம் குழந்தைகளும், கர்ப்பிணி பெண்களும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்ல முடியாமலும், தங்களுடைய சொந்த அன்றாட வாழ்க்கைக்குச் செல்ல முடியாமலும் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அந்தப் புலியை கூண்டோடு பிடிப்பதற்கோ அல்லது சுட்டுக் கொல்வதற்கோ ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் 27—2—1992-ஆம் தேதி பிற்பகல் 6.20 மணிக்கு, அவர் குறிப்பிட்ட இடத்தில் அரிகிருஷ்ணன் என்ற 7 வயது சிறுவன் புலி தாக்கி இறந்திருக்கிறான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய குடும்பத்திற்கு இன்றைக்கு முதல்வர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஐந்தாயிரம் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல அந்த சிறுத்தைப் புலியை பிடிப்பதற்காக கூண்டுகள் கொண்டுவரப்பட்டு அதிலே ஆடுகள் கட்டி, பிடிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டு கூண்டுகள் அங்கேகொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மிக விரைவிலேயே அந்தப் புலியை பிடிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1992 மார்ச் 19] [டாக்டர் அ. ஸ்ரீதரன்]

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புலி மிகவும் தந்திரமான புலி (சிரிப்பு). அது கூண்டிலே சென்று ஆட்டை பிடிப்பதில்லை. கம்பி வழியாக கையை நீட்டி ஆட்டை தினமும் தின்று கொண்டிருக்கிறது. ஆகவே இரண்டு, மூன்று கூண்டுகளை வைப்பதால் எந்தவிதமான பிரயோஜனமும் ஏற்படாது என்பதால் அந்த புலியை சுட்டுக் கொல்லுவதுதான் நிரந்தரமான வழி என்பதால் அதை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந் புலி அந்தச் சோலையில் பதுங்கி இருப்பதற்கு காரணம் அங்கே சுற்றியுள்ள மரங்களை வெட்டுவதால் அந்த மரங்களை வெட்டியதால் குத்துக் கட்டைகளை சோதனையின் போது கண்டுபிடித்துவிடுவார்கள் என்ற காரணத்தால் தீயை வைத்துவிடுகிறார்கள். குறிப்பிட்டச் சோலையினுடைய அனைத்துப் பகுதிகளிலும் தீ எரிவதால் புலி அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்குச் செல்லாமல் அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. எனவே அந்த வனத்தை தீவிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இந்தப் புலியையும் சுட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் புலியாக இருந்தாலும் "எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கக் கூடிய ஆற்றல், மிக்க முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவியின் ஆட்சியில் புலிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய மின் மோட்டாருக்குக் கூடுதல் மின் இணைப்பு வழங்கப் பெறாது குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் சி. சுவாமிநாதன், சி. குழந்தைவேலு, எஸ். சண்முகநாதன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிற விவசாய மின் மோட்டார்களுக்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அப்படியே வாசிக்க வேண்டும்.